2. சிறப்புக்கவன ஈர்ப்பு.

(அ) சட்டமன்றப் பேரவையில் 21-4-1993 அன்று நடந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டது குறித்துப் பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி அவர்கள் ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. வி. கே. சின்னசாமி.

*திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம், இந்தச் சட்டமன்றத்திலே நடந்த சம்பவம் குறித்தும் காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் மீது போடப்பட்ட வழக்குகள் குறித்தும், அவர்கள் மீது காவல் துறையினர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அரசு என்ன செய்திருக்கிறது என்பதைத் தாங்கள் விளக்கமாகத் தெரிவித்திருக்கிறீர்கள்.

ஆனால், இன்றைய பத்திரிகையைப் பார்க்கும்போது, காவல் துறை அவர்களைக் கைது செய்து, கோர்ட்டுக்குச் சென்று, கோர்ட்டிலே இருந்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக பத்திரிகைகளிலே, வழக்கறிஞர்கள் பக்கத்திலே இருப்பது போன்ற படம் எல்லாம் நாங்கள் பார்த்திருக்கிறோம். ஆகவே, இந்தச் சம்பவம் குறித்து இன்றைக்கு முன்னுக்குப்பின் முரணான செய்திகள் பத்திரிகைகளிலே வந்து கொண்டிருப்பதால், எங்களைப் போன்றவர்களும், பொது மக்களும் குழப்பமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அவை முன்னவர் அவர்கள் இதுகுறித்து உண்மையான நிலை என்ன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு விடை அளிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் எழுப்பிய பொருளுக்கு விடை அளிப்பேன் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

21-4-1993 அன்று சட்டமன்ற வளாகத்தில் காவலர்கள் தாக்கப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பரிதி இளம்வழுதி, திரு. ஞானசேகரன் திரு.பி.வி. இராஜேந்திரன் மீது குற்றவியல் நடவடிக்கை எடுப்பது பற்றி அவையின் கருத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டு அறிந்தார்கள். அவை முன்னவர் என்ற முறையில் சட்டமன்ற வளாகத்திற்

1993 ஏப்ரல் 23] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

குள்ளே குற்றம் இழைத்தவர்கள் மீது முறையான குற்றவியல் நடவடிக்கைகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளலாம் என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள், குற்றம் இழைத்தவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், முறைப்படி அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும், அதற்கான முறையான நடவடிக்கைகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளலாம் என்றும் கூறினார்கள். தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின்படி 21-4-1993 அன்று இரவு மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்திற்குக் கொண்டு போகப்பட்டார்கள். திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் காவலர்கள் தேடிய நிலையிலும் அகப்படவில்லை. மற்ற இருவர் மீதும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, உடன் அவர்கள் சொந்த ஜாமினில் வெளியே போகலாம் என்று கூறப்பட்டார்கள். உடனே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் சொந்த ஜாமினில் போக 21-4-1993 அன்றே காவல் நிலையத்திலே கையெழுத்து போட்டுவிட்டு, வெளியேறத் தயாராக ஆனார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் அந்த நேரத்திற்கு வந்து, அவர்கள் சொந்த ஜாமினில் வெளியே போக மறுத்துவிட்டு, காவல் நிலையத்திலேயே இருந்து விட்டார். மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதியினுடைய போக்கைப் பார்த்த, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் தானும் வெளியேற மாட்டேன் என்றும், காவல் நிலையத்திலே இருப்பேன் என்றும் அவர்களும் கூறிவிட்டார். சொந்த ஜாமினில் போவதற்கு திரு. ஞானசேகரன் அவர்கள் கையெழுத்து போட்டு, போக தயாராகவும் ஆகிவிட்டார். கையெழுத்தும் போட்டாகிவிட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் போகமாட்டேன் என்று சொன்னவுடனே தானும் போகமாட்டேன் என்று அவரோடு சேர்ந்து கொண்டு, காவல் நிலையத்திலே இருந்தார்கள். இருவரும் காவல்நிலையத்தை விட்டு வெளியேற மறுத்துவிட்டதன் காரணமாக, காவலர்களுக்கு வேறு வழி இல்லாத வகையில், 22-4-1993 அன்று காவலர்கள் அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று, உரிய நடவடிக்கையை நீதிமன்றம் எடுக்க வேண்டும் என்றும், அதாவது Appropriate action எடுக்க வேண்டும் என்றும் நீதிபதியைக் கேட்டுக் கொண்டார்கள். அல்லது அவர்களை சொந்த ஜாமினில் போகவிடலாம் என்றும் காவலர்கள் நீதிபதிக்குத் தெரிவித்தார்கள். அவர்களை சிறையில் அடைக்க வேண்டி இருந்தால்தான், காவலர்கள் டயரியைக் காண்பிக்க வேண்டிய அவசியமும், ரிமாண்ட் செய்ய வேண்டும் என்று வாதாட வேண்டிய அவசியமும் ஏற்படும். காவலர்களைப் பொறுத்து, நீதிமன்றத்தில் அவர்களை ரிமான்ட் செய்யவேண்டும் என்று வற்புறுத்தவில்லை. ரிமான்ட் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தாத நிலையில் டயரியைக் காண்பிகக்

வேண்டிய அவசியமும் இல்லை. ஆகவே அங்கே அவர்கள் சொந்த ஜாமீனிலே வெளியே போக மறுத்து விட்டதன் காரணமாக உரிய நடவடிக்கைகளை நீதிமன்றம் எடுத்துக் கொள்ளட்டும் என்பதற்காகத்தான் இங்கே கொண்டு வந்திருக்கிறோம் என்று காவலர்கள் தரப்பிலே சொல்லப்பட்டு, நீதிபதி அவர்கள் அதன்பேரிலே வெளியேற அவர்களுக்கு அனுமதி அளித்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் வெளியேறி விட்டார்கள். இதுதான் நடந்தது. ஆனால் காவலர்கள் அவர்களை வெளிவிட சம்மதித்தும், அவர்கள் சிறைக்குள்ளே போகத்தான் துடியாய் துடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய நோக்கம் என்ன என்பது புரிகின்றது. இதன் மூலம் என்ன விளைவுகள் ஏற்பட வேண்டும் என்று அவர்கள் எதிர் பார்த்தார்கள் என்பதும் நமக்குப் புரிகிறது. ஆனால் அவர்களுடைய எண்ணம் ஈடேறவில்லை. அவ்வளவுதான். ஆகவே கடைசியிலே அவர்கள் நீதிமன்றத்தின் மூலமாக போகலாம் என்று சொன்னதற்குப் பிறகு அவர்கள் போய் விட்டார்கள். ஆக ஒருவர் கையெழுத்துப் போட்டு போகக் தயாராக இருந்தார், காவல் நிலையத்திலே. மற்றவர் மறுத்ததன் காரணமாக இரண்டு பேரையும் நீதிமன்றத்திற்குக் கொண்டு போக வேண்டிய அவசியம் ஏற்பட்டதே தவிர, அவர்கள் இருவரையும் ரிமாண்ட் செய்ய வேண்டிய அவசியம் காவலர்களுக்கு இல்லை. இதுதான் நடந்தது. ஆனால் சில செய்தித்தாள்களிலே சிலபல வகைகளிலே வெவ்வேறு விதமாக வந்திருப்பதன் காரணமாகத்தான் இந்த விளக்கம் அளிக்க வேண்டிய அவசியம் வந்தது.

முற்பகல் 11—15

மற்றொரு பிரச்சினையும் எழுப்பப்பட்டது. அதாவது சட்டமன்ற வளாகத்திற்கு உள்ளேயே உறுப்பினர்கள் குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களேயானால் அவர்கள் மீது இந்தியன் பீனல் கோடு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கலாமா? எடுப்பதற்கு உரிமை இருக்கிறதா? சட்டமன்றத்திற்கு உள்ளே இருக்கிற நடவடிக்கைகள் அத்தனையையும் சட்டமன்றப் பேரவைத் தலைவர்தான் எடுக்கவேண்டும் என்கிற ஒரு ஐயப்பாடும் சிலபல ஏடுகளிலே எழுப்பப்பட்டிருக்கிறது. அது பற்றி நான் குறிப்பிடுகிறபோது தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

பாராளுமன்ற நடவடிக்கைகள் பற்றி கௌல் மற்றும் ஷத்தர் என்ற வல்லுநர்கள் எழுதிய நூலில் அதனுடைய பக்கம் 198-ல் பத்தி 3ல் ஒரு செய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறது. உறுப்பினர் ஒருவரால் சட்டமன்றத்திற்கு உள்ளாக குற்ற நிகழ்வு ஒன்று நடத்தப்பட்டால் அது சட்டமன்றத்தின் நடவடிக்கைகளில் சேர்ந்த ஒரு பகுதியாக கருதப்பட மாட்டாது. மகாராஷ்டிர சட்டமன்றத்தில் உறுப்பினர் ஒருவர் தான் பேசுவதற்கு ஒலி பெருக்கியை இயக்கித் தர வேண்டும் என்று ஒலி பெருக்கி

இயக்குநரைப் பார்த்து கூச்சல் போட்டார். அவர் மேஜை பளு கட்டையை எடுத்து அதாவது பேப்பர் வெயிட்டை எடுத்து ஒலி பெருக்கி இயக்குநர் இருக்கும் திசை நோக்கி வீசி எறிந்தார். அத்தோடு அவர் நில்லாமல் அவைத் தலைவர் இருக்கைக்கு அருகில் வந்து அவைத் தலைவருக்கு உரிய ஒலி பெருக்கியை பிடித்து இழுத்து பேசுவதற்கு முயன்றார். அதன் காரணமாக அவர் மீது இந்தியன் பீனல் கோடு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் காரணமாக அவர் தண்டிக்கப்பட்டு 6 மாத காலம் கடுங்காவல் சிறையில் அடைக்கப்பட்டார் என்று கௌல் மற்றும் ஷக்தர் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

Page 198, para 3 of Kaul and Shakdher—'A Criminal act committed by a Member within the House cannot be regarded as a part of the proceedings of the House. In Maharashtra, when a Member shouted at the Operator to connect his mike to the loudspeaker, threw a paper weight in the direction of the loudspeaker operator and rushed to the Speaker to catch the loudspeaker, he was subsequently convicted under different sections of the Indian Penal Code and sentenced to rigorous imprisonment for 6 months. என்று 1967லே அந்த நிகழ்ச்சி நடைபெற்றது. ஆக சட்ட மன்றத்திற்குள்ளே குற்றவியல் நிகழ்ச்சிகள் நடைபெறுமே யானால் அந்த உறுப்பினர் மீது இந்தியன் பீனல் கோடு சட்டத்தின்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கையை எடுக்கலாம் என்றும் அதன் காரணமாகத் தண்டிக்கப்படலாம், சிறையிலே அடைக்கப்படலாம் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிற காரணத்தாலே இது சட்ட மன்றத்திற்கு உள்ளே கூட இங்கே நடைபெறவில்லை. சட்ட மன்றத்திற்குப் பிறகு இருக்கிற தாழ்வாரத்தில் நடைபெற்ற தன்மை என்றாலும் கூட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குக் கீழே பணியாற்றுகின்ற பணியாளர்களாக விளங்குகின்ற காவலர்கள் தாக்கப்பட்ட நிலையிலே அது குற்றம் இழைக்கப்பட்டதாக கருதப்பட்டு இந்தியன் பீனல் கோடு சட்டத்தின் படி நடவடிக்கை எடுப்பது என்பது எந்த வகையிலேயும் தவறாக ஆகாது என்பதை மட்டும் நான் தெளிவுபடுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்ட அந்த மகாராஷ்டிரா சம்பவம் பற்றிய முழு விவரமும் இப்போதுதான் எனக்குக் கிடைத்திருக்கிறது. 1967-லே என்று தெரிவித்தார்கள். 1967-லே வெளியிடப்பட்ட புத்தகத்திலே இருக்கக்கூடிய செய்தி அது. அந்த சம்பவம் நடந்தது 1964 ஆகஸ்டு 12 ஆம் தேதி. மகாராஷ்டிரா சட்ட மன்றத்தில் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. லௌட் ஸ்பீக்கர் ஆப்பரேட்டர் மீது ஏதோ ஒரு பொருளை எடுத்து வீசிய நிகழ்ச்சி பற்றித்தான் பேரவை முன்னவர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். வீசப்பட்ட அந்த சம்பவம் அங்கே நடந்தவுடன் அது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முடிவு செய்து,

"On the 13th August 1964, the Speaker informed the House of the receipt of the following letter dated the 12th August 1964 from the Assistant Commissioner of Police, Bombay: ......".

முற்பகல் 11-20.

அந்தச் சம்பவத்தை உரிய இண்டியன் பீனல் கோடுபிரிவுப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டவுடன் காவல் துறையினர் தெரிவித்த செய்தியை மறு நாள் பேரவைத் தலைவர் அவைக்குத் தெரிவித்திருக்கிறார்.

"Sri Jambuvanto Baburaoji Thote, MLA, Maharashtra State was arrested at 5-20 p.m. on the 12th August1964 in connection with Colaba Police Station Cr. Nos. 434 and 435 under sections 353, 333, 426 IPC and 307 IPC."

லௌட் ஸ்பீக்கர் ஆப்பரேட்டரை நோக்கி ஒருவர் ஒரு பொருளை பேரவைக்குள் வீசி எறிந்தார் என்பதற்கு 1964-ல் அந்தப் பேரவை உறுப்பினர் மீது மராட்டிய மாநிலத்தில் போடப்பட்ட செக்ஷன் 307. இங்கே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நேற்றைய தினம் தெரிவித்தார்கள், மென்மையான நடவடிக்கைகளைத்தான் நாங்கள் எடுக்கிறோம் என்று. அங்கே போட்டது கொலை முயற்சி வழக்கு. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இவ்வளவு பெரிய காரியத்தை இங்கே செய்தவர்கள் மீது போலீஸ் ஸ்டேஷனிலேயே வெளியே போய் விடலாம் என்கிற அந்த மென்மையான செக்ஷனைத்தான் போட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.) (குறுக்கீடு) 1964-ல் நாடு பூராவும் காங்கிரஸ் அரசாங்கம். அந்த காங்கிரஸ் வேறு என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) அதே மாதிரி அந்த வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்கிற செய்தியைச் சொன்ன பின்னர்,

"On the same day, i.e., the 13th August 1964, the Chief Minister and Leader of the House, Sri V. P. Naik....."

அப்போது முதலமைச்சர் மராட்டியத்தில் வி.பி. நாயக் இருந்திருக்கிறார்.

"..moved the following Motion :

'That this House, having witnessed on the 12th August 1964, the grossly disorderly conduct of Sri J.B. Thote, a Member of this House places on record its profound sense of shock and indignation at the discourtesy and indignity offered to the person of the Hon. Speaker and the Hon. House as a whole."

லௌடு ஸ்பீக்கர் ஆப்பரேட்டர் என்கிற பேரவைத் தலைவருடைய அலுவலரை அந்த அளவுக்கு மோசமாக நடத்தியதற்காக என்று சொல்லி அன்றைய முதலமைச்சர் அந்த மராட்டிய

1993 ஏப்ரல் 23]   [பேரவைத் தலைவர்]

மாநிலப் பேரவையில் முன்மொழிந்த தீர்மானத்தைத்தான் இப்போது நான் படித்துக் கொண்டு இருக்கிறேன்.

"....This was a gross contempt of the House and the Speaker. The House, therefore, hereby resolves that the said Sri J.B. Thote deserves summary explusion from the House and orders that he be expelled accordingly."

அன்றைய முதலமைச்சர் இப்படிப்பட்ட சம்பவம் மராட்டிய மாநிலத்தில் நடைபெற்றபோது முன்மொழிந்த தீர்மானம். இந்த உறுப்பினரை அடியோடு அவையிலேயிருந்து வெளியேற்ற வேண்டும் என்கிற தீர்மானத்தை அன்றைக்கு காங்கிரஸ் முதலமைச்சர் மராட்டியத்தில் திரு. வி. பி. நாயக் முன் மொழிந்திருக்கிறார். நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வளவு கடுமையாக இங்கே அவர்கள் நடந்து கொண்டாலும்கூட மென்மையான நடவடிக்கை தான் நாங்கள் எடுக்கிறோம் என்று சொன்னதற்கு அர்த்தம் இன்றைக்குப் புரிந்து கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். மராட்டிய மாநிலத்தில் அவர்கள் போட்ட வழக்கு ஐ.பி.சி. 307-ல் கொலை முயற்சி வழக்கே போட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே போலீஸ் ஸ்டேஷனிலேயே வெளியே போய் விடலாம் என்கிற சாதாரண வழக்கு. அதற்குப் பிறகு, அந்த உறுப்பினரை நீக்கி அந்த முதலமைச்சர் அவர்கள் முன் மொழிந்த அந்தத் தீர்மானத்தை அந்த அவை அன்றைக்கு எடுத்தது.

முற்பகல் 11–25

"On the adoption of the Motion for expulsion of Sri Thote, the following Notification was published in the Maharastra Government Gazette Extraordinary, dated the 14th August 1964 declaring Sri Thote's seat vacant in the Maharashtra Legislative Assembly."

அந்த உறுப்பினரை முழுமையாக வெளியேற்றி அவருடைய பதவியையே அன்றைக்கு காலி செய்து தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள்.

அந்த நோட்டிபிகேஷனுடைய பாகம் இப்படி இருக்கிறது.

"No. 14964-E: Consequent upon the adoption of the Resolution by the Maharashtra Legislative Assembly on the 13th August 1964 expelling from the House Sri Jambuvanto Baburoaji Thote, a Member elected to the Maharashtra Legislative Assembly from Ekmarg Constituency, he has ceased to be a Member of the Assembly with effect from the 13th August 1964 afternoon."

அவ்வாறு அரசாங்கம் அவருடைய எம்.எல்.ஏ. பதவியையே பறித்து ஆணை வெளியிட்டதற்குப் பிறகு,

"Sri J.B. Thote filed a Writ Petition in the Bombay High Court against the decision of the Maharashtra Legislative Assembly which was withdrawn by the Petitioner afterwards."

அந்த உறுப்பினர்கூட கடைசியில் அவை எடுத்த முடிவையும் அரசாங்கம் அவருடைய இடத்தையே காலி செய்து உத்தர விட்டதையும்கூட ஏற்றுக் கொண்டு அவர் பைல் செய்த அந்த ரிட் மனுவைக் கூட வித்ட்ரா செய்து கொண்டார்கள் என்பது தான் அன்றைக்கு நடந்து இருக்கிறது. அந்த அளவுக்கு எல்லாம் சம்பவங்கள் பேரவையினுடைய அந்த இறையாண்மையைக் காப்பதற்காக, பேரவையின் கண்ணியத்தைக் காப்பதற்காக எடுக்கப்பட்டு இருக்கிறது என்கிற இந்தச் செய்தியையும் பேர வைக்குத் தெரிவிக்கிற நேரத்தில் இங்கே எங்களுடைய காவலர் கள் இன்றைக்கும் மருத்துவமனையில் இருக்கிறார்கள். அந்த நெஞ்சிலே எத்தப்பட்ட காவலரை நான் நேற்றுப் பார்க்கிற போது பேசுவதற்கே திணறித், திணறிப் பேசுகிறார். அந்த அளவுக்கு நிலைமை இருக்கிறது. நேரடியாக எத்தியதை இங்கே பத்திரிகையாளர்களும் பார்த்தீர்கள். எந்த அளவுக்குத் தாக்கப்பட்டார்கள் என்பதையும் நீங்கள் பார்த்தீர்கள். இன் றைக்கு ஒரு பெரிய மனிதர் வெளியிலே சொல்லியிருக்கிறார். 3 பேர் கூடி 8 பேரைத் தாக்கி விட முடியுமா என்று. அதுதான் நடந்தது. இவர்கள் 8 பேர் நினைத்தால் 3 பேரைத் தாக்கி விடாமல் தடுத்து இருக்க முடியும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு படத்திலே செய்ததைப் போல அடிக்க, அடிக்க அண்ணா நாமம் வாழ்க; அண்ணா நாமம் வாழ்க, என்று அடி வாங்கிக் கொண்டே இருந்ததைப் போல அவர்கள் அடிக்க, அடிக்க கடமையைக் கருதி இந்த அவையினுடைய கண்ணியத் தையும் கருதி காவலர்கள் அடி வாங்கிக் கொண்டே இருந்த காரணத்தால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) 3 பேரிவிடத் திலே 8 காவலர்கள் அடி வாங்கியிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவிக்க வேண்டும், அந்தப் பெரிய மனிதருக்கு. எனவே, இங்கே காவலர்கள் தாக்கப்பட்ட சம்பவம் என்பதைக் கண்ணாரப் பார்த்தீர்கள், அதன் மீது உரிய கிரிமினல் நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையின் காரண மாக அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் என்பதைக் கருதி மிக மென்மையான நடவடிக்கை எடுத்தார்கள். அந்த மென்மையான நடவடிக்கையைக் கூட இன்றைக்கு வெளியிலே விமர்சனம் செய்து கொண்டிருக்கிறவர் களுக்கு இந்த மராட்டிய மாநிலத்திலே நடைபெற்ற சம்பவம் இனிமேலேனும் அவருடைய கண்களைத் திறக்கும் என்று எதிர் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)